# திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!

## சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. தெரிவிக்கிறார்!

*கடலூர், ஜூன். 9-*

*திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் முழுவதும் நாளை (10.06.2026) கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சி.வி.கணேசன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறனர்.*

*அரசன்குடி காலை 7 மணியளவில் தொடங்கும் அவர்,*

*எஸ் நரையூர்7.15 மணி*

*வடபாதி 7.30 மணி*

*எஸ்.புதூர் 7.45 மணி*

*சிறுப்பாக்கம் 8.00 மணி (காலை உணவு)*

*மாங்குளம்: 8.45 மணி*

*ரெட்டாக்குறிச்சி 9 . மணி*

*கொளவாய் 9.15 மணி*

*கீழ் ஒரத்தூர் 9.30 மணி*

*ஜா. ஏந்தல் 9.45 மணி*

*அடரி 10.00 மணி*

*களத்தூர்10.30 மணி*

*காஞ்சிராங்குளம் 10.45 மணி*

*பொயனப்பாடி 11. மணி*

*கச்சிமைலூர் 11.15 மணி*

*விநாயநந்தல் 11.30 மணி*

*பாசார் 11.45 மணி*

*கல்லூர் 12.00 மணி*

*ம.புடையூர் 12.30 மணி (மதிய உணவு)*

*செவ்வேரி மாலை: 3. மணி*

*புல்லூர் 3.30 மணி*

*தொண்டங்குறிச்சி 3.45 மணி*

*அரியநாச்சி 4.00 மணி*

*கழுதூர் 4.45 மணி.*

*சிறுகரம்பலூர் : 4.30 மணியளவில் நிறைவு செய்கிறார்.*

# எது பழமையானது சிந்து சமவெளி நாகரிகமா? தமிழர் நாகரிகமா?

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!


4 சென்னை 8-6-2026

தலையங்கம்

தினத்தந்தி

8.6.2026 (திங்கட்கிழமை)

கீழடி தமிழர் நாகரிக வயதை குறைப்பதா?

*சென்னை, ஜூன் 9-*

*ஒன்றிய அரசாங்கம் தொன்மை நாகரிகம் குறித்து இருவேறு கருத்துகள் வந்துள்ள நிலையில் எது பழமையானது சிந்து சமவெளி நாகரிகமா? தமிழர் நாகரிகமா? என்பது குறித்து 'தினத்தந்தி' தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பழங்காலத்தில் சிறந்த நாகரிகங்கள் என்ற பட்டியலில் எகிப்து நாட்டு நாகரிகம் முதல் இடத்தில் வைக்கப்பட்டு இருந்தது. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அங்கு பிரமிடுகள், கோவில்கள், மலையை குடைந்து மிகப்பெரிய கல்லறைகள் போன்றவை பிரமாண்ட அளவில் கட்டப்பட்டுள்ளன. அவையனைத்தும் இன்றும் அதே நிலையில் இருக்கின்றன என்பதே இந்த அந்தஸ்துக்கு காரணம் அதுபோல இந்தியாவில் உள்ள சிந்துசமவெளி நாகரிகமும் பழங்காலத்திய சிறந்த நாகரிகமாக போற்றப்பட்டு வருகிறது.*

*இதற்கு காரணம் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் அழகிய வீடுகள், தெருக்கள், கழிவறை கால்வாய்கள், குளிக்கும் இடங்கள் போன்றவற்றை அமைத்து நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாதாரங்கள் அவர்கள் கட்டிய அந்த அமைப்புகளின் எச்சங்களாக இன்றும் காணப்படுகின்றன. இதனால் சிந்து சமவெளி நாகரிகமும் போற்றப்படுகிறது.*

*எகிப்து நாகரிகத்துக்கும், சிந்துசமவெளி நாகரிகத்துக்கும் முந்தையது தமிழர்களின் நாகரிகம் என்று ஆண்டாண்டுகாலமாக தமிழ்சமுதாயம் உரக்கச் சொல்லி வந்தாலும், அதை நிரூபிப்பதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் அதனை உலக ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.*

*இந்த பெருங்குறையை மதுரையையொட்டிய சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் நடந்த தொல்லியல் ஆய்வுகள் தீர்த்துவைத்தது மட்டுமல்ல, தமிழர் நாகரிகம் மிகவும் பழமையானது என்று பறைசாற்றியது. அப்போது தென்னிந்திய தொல்பொருள் இலாகாவின் கண்காணிப்பாளராக இருந்த கே.அமர்நாத் ராமகிருஷ்ணன் குழுவினர் கீழடியை சல்லடைப் போட்டு ஆராய்ந்து தமிழர் நாகரிகத்தை, வரலாற்றில் தேடும்பணியில் முழுமூச்சாக இறங்கினார்கள். மதுரை மண்ணின் சொந்தக்காரரான கே.அமர்நாத் ராமகிருஷ்ணனுடன், துணைகண்காணிப்பாளரான திரு நெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ராஜேஷ், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த என்.வீரராகவன் ஆகியோர் கொண்ட குழுவினர் 102 குழிகளைத்தோண்டி ஆய்வுநடத்தி, அந்த காலத்து தமிழர்கள் பயன்படுத்திய 5,800 தொல்பொருட்களை கண்டெடுத்தனர். அங்கு காணப்பட்ட அமைப்புகள் சுமார் 2,800 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிக மிக்க மக்களைக்கொண்ட ஒரு நகரம் இருந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தியது.*

*இந்த ஆய்வுகளை 982 பக்கங்களில் தயார்செய்து அமர்நாத் ராமகிருஷ்ணன் 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய தொல்பொருள் இலாகாவிடம் சமர்ப்பித்தார்.*

*இந்த அறிக்கையை தொல்பொருள் இலாகா வெளியிடவுமில்லை. மாறாக கீழடிகாலத்தை சிந்துசமவெளி நாகரிக காலத்தைவிட குறைவாக இருக்கும்வகையில் அதாவது, 500 ஆண்டுகளை குறைத்துக் காட்டச்சொல்லி அமர்நாத் ராமகிருஷ்ணனுக்கு மத்திய அரசாங்கம் அழுத்தம் கொடுத்தது. அதை அவர் ஏற்கமறுத்ததால் உடனடியாக நொய்டாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.*

*இப்போது தேசிய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருட்கள் குழுமத்தின் இயக்குனராக இருக்கும் அமர்நாத் ராமகிருஷ்ணனிடம், இப்போதும் உங்கள் அறிக்கையை மாற்றம்செய்து அனுப்புங்கள் என்று தொடர்ந்து ஒன்றிய அரசு வலியுறுத்துகிறது. ஆனால் அவர் இதற்கு உறுதியாக மறுப்பு தெரிவித்ததோடு, "எனது மனசாட்சிப்படி உண்மையான ஆய்வுகளின் அடிப்படையில் என் ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளேன். எனது அகழாய்வில் கண்டுபிடித்த சான்றுகளின் அடிப்படையிலும், எது உண்மையோ?, எது நிரூபிக்கப்படுகிறதோ? அதை பின்பற்றித்தான் எனது அறிக்கையை தாக்கல்செய்துள்ளேன்.*

*எனவே இதை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை' என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். மேலும் இது குறித்து இந்தியதொல்பொருள் ஆய்வுநிறுவனத்தின் உள்குழு அறிக்கைக்கேற்ப அறிக்கையில் மாறுதல்களை செய்வோம் என்று அமர்நாத் ராமகிருஷ்ணனிடமும் கேட்டுக்கொள்ளப்பட்டும் இருக்கிறது. இப்போது ஒன்றிய அரசாங்கம் இந்த தொன்மை நாகரிகம் குறித்து இருவேறு கருத்துகள் வந்துள்ள நிலையில் எது பழமையானது? சிந்துசமவெளி நாகரிகமா? தமிழர் நாகரிகமா? என்பதை வரலாற்று சான்றுகள், விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை கொண்டு எது சரியான பதிவு என்பதை வெளிப்படைத்தன்மையோடு சமுதாயத்துக்கு தெரிவிக்கவேண்டும்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

## நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமை! திண்டிவனத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் 500 நபர்களுக்கு உணவு வழங்கினார்!

*திண்டிவனம் ஜூன் 9 -*

*முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம் சமரச சுத்த சன் மார்க்க சத்திய தருமச் சாலையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 500 நபர்களுக்குஅறுசுவை உணவுவழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமை தாங்கினார்.*

*விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103-வது பிறந்தநாள் விழா செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி திண்டிவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம் சமரச சுத்த சன் மார்க்க சத்திய தர்ம சாலையில் ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஊரல் அண்ணாதுரை, மாவட்ட விவசாய அணி துணை தலைவர் நெடி சுப்ரமணியன், மாவட்ட வரத ராஜனின் துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் சூரிய பிரகாஷ், காமராஜ், சமரச சுத்த சன்மார்க்க சத்திய தர்மசாலையில் நிர்வாகிகள் ராஜேந்திர பிரசாத், ராஜேஸ்வரி, திண்டிவனம் வள்ளலார் சங்கத் தலைவர் புஷ்பநாதன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி திண்டிவனத்தில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய தர்மசாலையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், திண்டிவனம் நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் நெடி சுப்பிரமணியன், சமரச சுத்த சன்மார்க்க சத்திய தர்மசாலையின் நிர்வாகிகள் ராஜேந்திர பிரசாத், ராஜேஸ்வரி, புஷ்பநாதன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# தி.மு.க. ஏன் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இருக்கிறது?

மாற்றுக் கட்சியினர் அணி அணியாக தி.மு.கவில் இணையும் காட்சிகளை அன்றாடம் பார்த்துவருகிறோம். தி.மு.க. கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு பின்னடைவை சந்தித்தபிறகும் இவர்கள் தி.மு.க.வில் வந்து இணைவதன் பொருள் என்ன? வென்றவர்களிடம் போய் சேர்ந்துகொள்வதுதான் உலக இயல்பு. ஆனால் சமீபத்தில் பெரிய தேர்தல்கள் எதுவும் இல்லாத நிலையிலும்கூட இந்த இணைப்புகள் எதைக்காட்டுகின்றன?

தமிழ்நாட்டில் உறுதியான எதிர்காலம் உள்ள ஒரே கட்சி தி.மு.க.தான் என்பதுதான் கள எதார்த்தம். தனக்கென கொள்கையுள்ள ஒரே கட்சியாகவும் மாநில நலன் சார்ந்த சமரசமற்ற போர்க்குணம் கொண்ட தலைவரைக்கொண்ட இயக்கமாகவும் தி.மு.க. மட்டுமே இருக்கிறது. இன்று காற்றில் வண்ணமயமாக இருக்கும் நீர்க்குமிழிகள் உடைவதற்கு அதிக நேரமாகாது. தி.மு.க. எந்த நேரத்திலும் பல மடங்கு வலிமையுடன் எழுந்துவரும் என்பது அரசியலில் அடிப்படை அறிந்த அனைவருக்கும் தெரியும். இந்த இணைப்புகள் மேலும் மேலும் தொடரப்போகின்றன. தற்காலிக ஆதாயங்களுக்காக தி.மு.க.விட்டு விலகிச் சென்றவர்கள் தங்கள் கட்சிகளை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நம்பகமான தலைவர்!**


தி,மு,க.வை அரசியல் ரீதியாக எதிர்க்கும் கட்சிகளுக்குக் கூட தி.மு.க.விற்கு இழைக்கப்பட்ட துரோகம் பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளன. இந்திய பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன்பு காங்கிரஸ் தி.மு.க.விற்கு இழைத்த துரோகத்தை சுட்டிக் காட்டிப் பேசினார். நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தி.மு.க.கூட்டணி மூலம் காங்கிரஸ் பெற்ற பத்து நாடாளுமன்ற இடங்களை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க. கூட்டணியைவிட்டு வெளியேறட்டும் என்றார். அ.ம.மு.க. கட்சி பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன்' தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளின் கருணையால் விஜய் ஆட்சி நடத்துகிறார். த.வெ.க. அரசிற்கு ஆதரவளிக்கும் கட்சிகள் விரைவில் வருத்தபடுவார்கள்' என்று கூறியிருக்கிறார். தி.மு.க.வை சுற்றி நடப்பவை அனைத்தும் இன்று தமிழ்நாட்டின் அன்றாட பேசு பொருளாகியுள்ளன.

தமிழ்நாடு அரசியலில் மட்டுமல்ல, இந்திய அரசியலுமே தி.மு.க.வை மையமிட்டே சுழல்கின்றன. இந்தியா கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறும் முடிவு பல கட்சிகளையும் அதிர்ச்சியடைச் செய்துள்ளது. பதினைந்து ஆண்டுகளாக பா.ஜ.கவிற்கு எதிராக தேசிய அளவில் சமரசமற்ற போராட்டத்தை நடத்தி இந்தியா கூட்டணியை வலிமைபெறச் செய்தவர் தி.மு.க. தலைவர். அவர் இந்தியா கூட்டணியின் தேசிய முகம். பல்வேறு மாநில தேசிய தலைவர்களிடம் கலைஞருக்கு நிகரான மதிப்பும் நட்புணர்வும் கொண்டவர். பா.ஜ.க. எதிர்ப்பின் நம்பகமான தலைவர் என்ற நிலையினை நீண்டகாலமாக காத்துவருபவர். மேலும் தேசிய அளவில் எந்தப் பதவியையும் கோராதவர் என்பதால் எவருக்கும் அவரோடு போட்டியில்லை. அவர் இந்தியா கூட்டணியின் மையப் புள்ளி. தி.மு.க. இந்தியா கூட்டணியிலிருந்து வெளியேறுவது அந்த கூட்டணியை எவ்வளவு தூரம் பலவீனப்படுத்தும் என்பது கூட்டணியிலிருக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் தெரியும். கூட்டணியின் பல தலைவர்கள் முரண்பட்டு நின்ற நேரத்தில்கூட அதைப் பாதுகாத்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

**மனுஷ்ய புத்திரன்**

*மாநில ஆலோசகர்*

*தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி*



**ஆனால் இந்த அஸ்திவாரத்தையே அசைக்கும் வேலையை தமிழ்நாட்டில் தி.மு,கவிற்கு எதிராக மட்டுமல்ல பல மாநிலங்களில் தங்களது பல நண்பர்களுக்கு எதிராக காங்கிரஸ் செய்திருக்கிறது. காங்கிரஸிற்கு என்று தேசிய அளவில் கூட்டணிக் கொள்கைகளோ ஒன்றுபட்ட தேசிய நலன்களோ கிடையாது. அந்தந்தந்த தேர்தல்களில் அந்தந்த மாநிலத்தில் உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் ஆதாயங்களுக்காக தங்கள் தேசியக் கூட்டணி நண்பர்களுக்கு எதிராக குழி தோண்டுவது. பிறகு அதே கட்சிகளை நோக்கி "வாருங்கள்... பா.ஜ.க.வை எதிர்த்து காங்கிரஸை ஆட்சியில் அமர்த்துவோம் "என்று அழைப்பது. இப்படி ஒரு குரூரமான அரசியலை காங்கிரஸ் தொடர்ந்து நடத்துவதால்தான் இந்தியா கூட்டணி தொடர்ந்து பலவீனமடைந்து வந்திருக்கிறது. காங்கிரசின் இந்த இரட்டைக்குதிரை சவாரிக்குத்தான் தி.மு.க. இப்போது முடிவு கட்டியிருக்கிறது.**

பீகார் மற்றும் பல மாநிலங்களில் மாநிலக் கட்சிகளை நிர்பந்தித்து கூடுதல் இடங்களைப் பெற்று அவற்றில் பெருமளவு தோற்று அக்கட்சிகளையும் பலவீனப்படுத்துவது, தாங்க எதிர்த்தவர்களிடமே குதிரை பேரங்களில் ஈடுபட்டு கட்சிதாவல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவையெல்லாம் காங்கிரஸின் வழக்கமான செயல்முறைகளாகியுள்ளன.

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக காங்கிரஸ் நடத்திய தாக்குதல், மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸை' பயங்கரவாத இயக்கம்' என்றும் ராகுல் காந்தி வர்ணித்தது எல்லாம் அந்தக் கூட்டணியியின் வலிமையான சக்திகளை சிதறடித்துவிட்டன. கேரளத்தில் சி.பி.எம்., பா.ஜ.க.வுடன் கூட்டணியிலிருக்கிறது என்று ராகுல் காந்தி பேசியது அங்கு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. காங்கிரஸ் கட்சியிடம் இதற்காக சி.பி.எம். விளக்கம் கேட்டிருக்கிறது.

இந்தியாவில் ஒரு வலிமையான மாற்று அணியை யாரால் கட்ட முடியும் என்றால் அது தேசிய பொதுநலனில் அக்கறைகொண்ட நம்பகத்தன்மை கொண்ட தி.மு.க. தலைவரால் மட்டுமே முடியும். இந்தியா கூட்டணியில் தி.மு.க. தொடரவேண்டும் என்று சில காங்கிரஸ் தலைவர்கள் கோருவது இதனால்தான். 'தமிழ்நாடு காங்கிரஸ்தான் த.வெ.க. கூட்டணியிலிருக்கிறது, இந்திய தேசிய காங்கிரஸ் அல்ல' என்றெல்லாம் அவர்கள் பேசுவது ம்இதனால்தான். தங்களுக்கு எது ஆதாயமோ அது மட்டுமே எங்கள் அன்றைய தின அரசியல் நிலைப்பாடு என்ற கொள்கை கொண்டவர்களை காலம் கடுமையாகத் தண்டிக்கும்.

**தி.மு.க கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக தேசிய அரசியலில் ஒரு நிர்ணய சக்தியாகத் திகழ்ந்து வந்திருக்கிறது. பல பிரதமர்களையும் குடியரசுத்தலைவர்களையும் உருவாக்கிய கட்சி. இந்தியாவில் அரசியல் குழப்பங்கள் நிலவிய காலங்களில் நிலையான அரசுகள் உருவாக உறுதுணையாக இருந்த கட்சி. தி.மு.க. அளவு ஒன்றிய அரசுகளில் நீண்டகாலம் பங்கேற்ற மாநிலக் கட்சிகள் வேறு எதுவும் இல்லை. மாநிலத்திலும் தி.மு.க.வைபோல நீண்ட கால கூட்டணியை வேறு எந்த மாநிலக் கட்சியும் நிலை நிறுத்திய தில்லை. ஒரு கூட்டணி ஆட்சியை ஒன்றியத்தில் எப்படி உறுதியாக நடத்தவேண்டும் என்று தி.மு.க.விற்குத் தெரியும். தேசிய அளவிலும் மாநில அளவிலும் முரண்பட்ட கட்சிகளை ஒரு குடைக்குள் கொண்டு வந்து எப்படி ஒரு வலிமையான கூட்டணியை அமைக்க வேண்டும் என்பதும் தி.மு.க.விற்குத் தெரியும்.**

**த.வெ.க.வின் புதிய நண்பர்களின் சங்கடங்கள்!**

இன்று த.வெ.க.வோடு இணைந்து நிற்கும் கட்சிகள் நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கியுள்ளன. த.வெ.க. அரசின் செயல்பாடுகளும் பல பிரச்சினைகளில் அவர்களது நிலைப்பாடுகளும் அவர்களை சங்கடத்தில் நெளிய வைக்கின்றன. குர்பானி மாறு அறுப்பதற்குத் தடை, திருப்பரங்குன்றம் ஆவணப்படத்திற்குத் தடை, மின் வெட்டு, அமைச்சர்களின் அராஜகங்களும் கேலிக்கூத்துகளும் என பலவற்றிற்கும் அவர்கள் பதில் சொல்ல நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஒரு இடதுசாரித் தலைவர்' தி.மு.க. கூட்டணி என்ற ஒன்றே இப்போது இல்லை' என்கிறார். இன்னொரு தலைவர் 'நாங்கள் தி.மு.க. கூட்டணியில் நீடிக்கிறோம்' என்கிறார். மற்றவர்கள் கூச்சத்திலும் சங்கடத்திலும் சமாளிக்க முடியாதவற்றை எல்லாம் சமாளித்துக்கொண்டு திணறிக் கொண்டி ருக்கிறார்கள். இவர்களுக்கு இன்னும் இங்கே எவ்வளவுநாள் தாக்குப் பிடிக்க முடியும் என்ற சந்தேகம் வந்துவிட்டது. கூட்ட்ணியை விட்டு வெளியேறினால் அவர்கள் அ.தி.மு.க.விடம் செல்ல முடியாதபடி ஏற்கனவே த.வெ.க., அ.தி.மு.க.வை விழுங்கி வருகிறது. பா.ஜ.க. விழுங்கியதன் மிச்சம் அது. இந்நிலையில் தமிழ்நாட்டின் நிலையான வளர்ச்சிக்கான மக்கள் நல அரசை தி.மு.க.வே கொடுக்க முடியும் என்பதை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். விரைவில் கூட்டணியை விட்டுச் சென்ற பறவகள் கூடு திரும்வேண்டிய காலம் வரும்.

**தி.மு.க.விற்கு எதிரான தொடர் பொய்கள்!**

சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் தி.மு.க. தேர்தலுக்குப்பின்னும் ஒரு பேசுபொருளாக இருப்பதன் காரணம், தி.மு.க.வை ஒரு பலவீனமான சக்தியாக காட்டுவதற்காக பொய்ச் செய்திகளும் புரட்டுகளும் தொடர்ந்து பரப்பபடுவதன் காரணம் தி.மு.க. என்ற நெருப்பு கனன்றுகொண்டிருக்கிறது, அது எந்த நேரமும் காட்டுத்தீயாக மாறும் என்பதுதான். அதை எப்படியாவது நீரூற்றி அணைத்துவிடலாம் என கனவு காண்கிறார்கள். தி.மு.க.வின் தோல்வி தொடர்ந்து போஸ்மார்ட்டம் செய்யப்படுவதும் தி.மு.க.வின் அணிகள், சில தலைவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், விஜய் அடுத்த பதினைந்து வருடங்களுக்கு ஆட்சியில் இருப்பார், தி.மு.க. மீளவே முடியாது என கதை அளப்பதும் தி.மு.க.வைப்பற்றிய பதற்றத்தினாலும் பயத்தினாலும்தான். தி.மு.க. மீதான எதிர்மறை பொய்ப்பிம்பங்களைக் கட்டுவதன் மூலமாக அதை அழித்துவிடலாம் என்ற அவர்களது நம்பிக்கையை தி.மு.க. தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தி.மு.க. பின்னால் திரளும் இளைஞர்களும் சிதறடித்து வருகிறார்கள்.

**தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும் சரி இலாவிட்டாலும் சரி, தலைப்புச் செய்திகளை தி.மு.க.தான் தீர்மானிக்கும். அன்று அரசியலில் எது பேசப்படும் என்பதை கலைஞர் தீர்மானித்தார். இன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தீர்மானிக்கிறார்.**



விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்றத் தொகுதி, தி.கௌதம் எம்.எல்.ஏ.வை வெற்றி பெற செய்த கிளியனூர் கிழக்கு ஒன்றியம், கிளாப்பாக்கம், காயல்மேடு, தலைக்காணிக்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் வாக்காளப் பெருமக்களுக்கு, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் நன்றி தெரிவித்தார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் பிரேமா குப்புசாமி, கிளியனூர் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கிளியனூர் கே.எஸ்.ராஜி, வானூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி. கே.டி.முரளி, வானூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.